# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069082

1. District மாவட்டம் : Sivagangai    PS காவல்நிலையம்: VAC, Sivagangai    Year ஆண்டு: 2023    FIR No. மு.த.அ. எண்: 03/2023    Date நாள்: 20.04.2023

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988    Sections பிரிவுகள்: 7 of P.C. Act 1988 as amended by the P.C. (Amendment) Act 2018

   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from நாள் முதல் : 30.3.2023 19.4.2023    Date to நாள் வரை : at 1400 hrs

   Time Period : நேர அளவு    Time from நேரம் முதல் : 19.4.2023    Time to நேரம் வரை : at 4.30 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.4.2023    Time : நேரம் 08.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20.4.2023    Time : நேரம் 09.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 60 கி.மீ, கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி ஊராட்சி மன்ற அலுவலகம், பூசலாக்குடி, சிவகங்கை மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தங்கராஜ்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெருமாள்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் விவசாயம்    (g) Address : முகவரி இலுப்பக்குடி, தேவகோட்டை அஞ்சல் மற்றும் தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **திரு.மணிமுத்து, ஊராட்சி மன்ற செயலாளர், பூசலாகுடி ஊராட்சி மன்றம், சிவகங்கை மாவட்டம்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   **No Delay**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்ப்பிக்கிறேன்.** இன்று 20.04.2023 தேதி காலை 08.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுகா, தேவகோட்டை அஞ்சல், இலுப்பகுடி கிராமத்தை சேர்ந்த பெருமாள் மகன் திரு.தங்கராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், பூசலாகுடி ஊராட்சி மன்ற செயலாளர் திரு.மணிமுத்து ஆகியோர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் (பொறுப்பு) அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 20.04.2023-ம் தேதி காலை 09.00 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2023 U/s 7 of Prevention of (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ...................................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

தங்கராஜ் (signature) | A. Kannan (signature) INSPR VBAC

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.04.2023 at 10.00 hrs.

Name: பெயர் ...A. KANNAN
Rank: நிலை Inspector of Police, No. எண்
VBAC, Sivagangai

Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, **அனுப்புநர்** பெ.தங்கராஜ், த/பெ.பெருமாள், இலுப்பகுடி, தேவகோட்டை அஞ்சல் மற்றும் தாலுகா, சிவகங்கை மாவட்டம். **பெறுநர்** காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் இலுப்பகுடி கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். இலுப்பகுடியில் புதிதாக கட்ட உள்ள எனது வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி வாங்குவதற்கு இன்ஜினியரிடம் சென்று, எனது வீட்டிற்கான எஸ்டிமேட் மற்றும் வீட்டின் வரைபடத்தை வாங்கி, அத்துடன் வீட்டு இடத்திற்குண்டான நில உரிமை 10(1), ஆதார் கார்டு மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றின் நகல்களை இணைத்து 30.03.2023-ம் தேதியன்று பூசலாகுடி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு சென்று, அங்கு பணியில் இருந்த பூசலாகுடி ஊராட்சி மன்ற செயலாளர் திரு.மணிமுத்து அவர்களை சந்தித்து கொடுத்தேன். அவர், நான் கொடுத்த ஆவணங்களை சரிபார்த்துவிட்டு, என்னிடம், புதிதாக நான் கட்ட உள்ள வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி வழங்குவதற்குண்டான பணத்தை அரசு கணக்கில் வங்கி மூலம் செலுத்த வேண்டும் என்றும், கட்டிட வரைபட அனுமதி வாங்கி தருவதற்கு தனக்கு தனியாக ரூ.1,500/- வேண்டுமென கேட்டார். மேலும், அவர் என்னிடம், தற்போது தான் வருடாந்திர கணக்குகள் பார்த்து வருவதாக கூறி, என்னை 10 நாட்கள் கழித்து வருமாறு கூறினார். அதன்பின் அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டேன். அதன்பின் 13.04.2023-ம் தேதியன்று, மதியம் சுமார் 12.00 மணிக்கு பூசலாகுடி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு சென்று ஊராட்சி மன்ற செயலாளர் மணிமுத்துவை நேரில் பார்த்தபோது, அவர் என்னிடம், எனது புதிய வீட்டிற்கான கட்டிட வரைபட அனுமதிக்கு அரசுக்கு செலுத்தவேண்டிய தொகை ரூ.8,600/-ஐ தேவகோட்டை, பாண்டியன் கிராம வங்கியில் ஊராட்சி மன்ற வங்கி கணக்கு எண்.10064911607-ல் செலுத்திவா சொன்னார். அவ்வாறே நானும் பணம் ரூ.8,600/-ஐ மேற்படி வங்கியில் செலுத்தி, ரசீது பெற்று, மதியம் சுமாார் 02.00 மணி அளவில் பூசலாகுடி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு வந்து, அங்கு பணியில் இருந்த மணிமுத்துவிடம் ரசீதை கொடுத்தேன். அதை அவர் வாங்கி வைத்துக்கொண்டார். அதன் பின், அவர் என்னிடம், தனக்கு கொடுக்கவேண்டிய தொகை ரூ.1,500/-யை கேட்டார். நான் அதற்கு, தற்போது என்னிடம் பணம் எதுவும் இல்லை என்று கூறினேன்.

அதற்கு அவர், பணம் ரூ.1,500/- கொடுத்தால்தான் கட்டிட வரைபட அனுமதி வாங்கி கொடுப்பேன் என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டார். அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பின் நேற்று 19.04.2023-ம் தேதி மதியம் சுமார் 11.30 மணியளவில் ஊராட்சி மன்ற செயலாளர் மணிமுத்துவை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து, எனது கட்டிட வரைபட அனுமதி சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், உங்கள் வீட்டிற்குண்டான கட்டிட வரைபட அனுமதி தயாராக உள்ளது என்று கூறி, தனக்குண்டான பணம் ரூ.1,500/-யை கொண்டு வந்துள்ளீர்களா? என்று கேட்டார். அதற்கு நான், அவரிடம், அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்தவே, நான் மிகவும் கஷ்டப்பட்டுவிட்டேன் என்று கூறினேன். அதற்கு ஊராட்சி மன்ற செயலாளர் மணிமுத்து, கட்டிட வரைபட அனுமதிக்கு, நான் எப்போதுமே ரூ.1,500/- வாங்குவது வழக்கம், உனக்காக வேண்டுமானால் ரூ.500/-யை குறைத்துக் கொள்கிறேன், பணம் ரூ.1,000/-த்தை கொடு என்று சொன்னார். நான் என்னிடம் பணம் எதுவும் இல்லை என்று சொன்னேன். அதற்கு ஊராட்சி மன்ற செயலாளர் மணிமுத்து ரூ.1,000/-த்தை கொடுத்தால்தான், கட்டிட வரைபட அனுமதி கிடைக்கும் என்றும், நாளை பணம் ரூ.1,000/-த்தை கொடுத்துவிட்டு, கட்டிட வரைபட அனுமதி வாங்கி செல்லும்படி கண்டிப்புடன் சொல்லிவிட்டார். நான் அங்கிருந்து கிளம்பி எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். கட்டிட வரைபட அனுமதி பெற, ஊராட்சி மன்ற செயலாளர் மணிமுத்துவிற்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. மேலும் ஊராட்சி மன்ற செயலாளர் மணிமுத்து லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,000/-த்தை கொண்டு வந்துள்ளேன். எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட பூசலாகுடி ஊராட்சி மன்ற செயலாளர் மணிமுத்து மீது நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) தங்கராஜ் 20.04.23.

Sir, Received the complaint on 20.04.2023 at 08.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedent of the accused was also verified through sources and found bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted, the matter is intimated to the SP/NR i/c SR, V&AC, Chennai and registered a case in Sivagangai, Vigilance and

Anti-Corruption Detachment Crime No.03/2023, U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 on 20.04.2023 at 09.00 hrs and took up for Investigation. (Sd) A.Kannan, 20.04.2023, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai Detachment.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases under PC Act, Sivagangai and the copies submitted to the concerned officers.

A. Kannan
Insp/VAC
20/4/2023.